திரு. சு. துரைசாமி : கோவையிலிருக்கிற இந்த குழந்தைகள் மருத்துவ மனையில் போதுமான படுக்கை வசதிகள் இல்லாத காரணத்தாலே வசதிக் குறைவாக இருக்கிறது. எனவே அதிகமாகப் படுக்கை வசதிகளை ஏற்படுத்த விரைவிலே அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது 90 குழந்தைகளுக்காகப் படுக்கை வசதி அங்கே செய்துதரப்பட்டு இருக்கிறது. தினமும் 120 குழந்தைகள் அங்கே சிகிச்சை பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். பொதுவாக நாளுக்கு நாள் தங்கிச் சிகிச்சை பெறுகிறவர்களும், அவுட் பேஷண்ட் ஆக சிகிச்சை பெறுகிறவர்களும் அதிகமான அளவில் வருவதால் அந்த அளவுக்குச் சிகிச்சையும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் லயன்ஸ் கிளப்பினர் அதிகமான படுக்கை வசதிகளைச் செய்து தருவதாக விண்ணப்பம் செய்து இருக்கிறார்களே, அப்படியென்றால் அதன்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தற்பொழுது அதுபற்றிய தகவல் இல்லை.

திரு. இரா. மாணிக்க வாசகம் : தலைவர் அவர்களே, கோவை மருத்துவ மனையில் குழந்தைகளைக் கவனிப்பதற்குத் தனிப் பயிற்சிபெற்ற சில்ரன் ஸ்பெஷலிஸ்டுகளைப் போடும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கேள்வி அந்த மருத்துவ மனையிலே இருக்கிற குழந்தைகளின் படுக்கை வசதிகளை அதிகப்படுத்துவது குறித்து உள்ளது. அவர்களுடைய சிகிச்சைக்காக மேலும் மருத்துவ நிபுணர்களைப் போடுவது பற்றித் தகவல் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் அளிக்கலாம்.

திருச்சிராப்பள்ளி மாவட்ட கூட்டுறவு நூற்பாலை

* 193 வினா—**திரு. யெ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரிலுள்ள திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் அரசு நியமித்துள்ள நெறியாளர்கள் எத்தனை பேர் ?

(இ) சட்டப்பேரவை உறுப்பினர் யாராவது நெறியாளராக நியமிக்கப் பட்டுள்ளாரா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) மாவட்ட கூட்டுறவு நூற்பாலைகளுக்குக் கைத்தறி நெறியாளர்தான் நெறியாளர் குழுவில் அங்கத்தினர்களை நியமிக்கின்றார். தற்போது திருச்சி மாவட்ட கூட்டுறவு நூற்பாலையில் கைத்தறி நெறியாளரால் நியமிக்கப்பட்ட 14 உறுப்பினர்கள் உள்ளனர்.

(இ) மேற்படி ஆலையின் நெறியாளர் குழுவில் திரு. ஆர். நாகசுந்தரம், எம்.எல்.ஏ. ஒரு நெறியாளராக இருக்கிறார்.

Deputy Inspectors of Schools

* 194 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(*a*) whether the Government is conducting a one-month " induction course " for Deputy Inspectors of Schools at the State Institution of Education, Madras; and

(*b*) if so, the object and aim of this " induction course " ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.